**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 79/2022**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.3 |
| NAME | சின்னராஜ் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 03.03.2026.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. வழக்கின் விவரங்கள் கோமதி சொல்லி எனக்கு தெரியும். கோமதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார் என்றால் பாகப்பிரிவினை கேட்டு போட்டுள்ளார். முதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டவை என்றால் கோமதி சொல்லி தயார் செய்யப்பட்டவை. மற்றபடி விவரங்கள் தெரியாது என்றால் சரியல்ல சம்பத் காணாமல்போனது தெரியும்.

2. சம்பத் எப்போது காணாமல் போனார் என்றால் கல்லேரியில் உள்ள சொந்த வீட்டில் இருந்து 2005–ல் இருந்து காணாமல் போனார். சம்பத் என் நண்பரா என்றால் எனது ஊர்க்காரர். அவரது உடல்நிலையில் ஏதாவது பாதிப்பு உள்ளதா என்றால் அதெல்லாம் கிடையாது. சித்ராவை தெரியும். அவருக்கு உடலில் பாதிப்பு உள்ளதா என்றால் இல்லை நன்றாக இருப்பார். சித்ரா எங்கு வசிக்கிறார் என்றால் கோயம்புத்தூரில் வசிக்கிறார்.

3. முதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் சம்பத் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் இந்த வழக்கு பற்றியும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சம்பத் காணாமல் போனது பற்றி போலிசில் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை, அவர்கள் தேடி பார்த்தார்கள். எங்கு தேடி பார்த்தார் என எனக்கு தெரியாது என்றால் ஊரில் தேடி பார்த்தார். சம்பத்தின் அப்பா கண்ணன் அம்மா முனியம்மா. அவர்கள் எப்போது இறந்தார்கள் என தெரியுமா என்றால் கண்ணன் இறந்து 40 வருடமாயிருக்கும் முனியம்மா இறந்து 10 வருடமாகிறது. சம்பத்தின் மனைவி ராணி உயிரோடு உள்ளாரா என்றால் இல்லை. முனியம்மா இறப்பதற்கு முன்பு ஒரு வருடத்திற்கு முன்பே ராணி இறந்துவிட்டார்.

எனது முதல் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானவை என்றாலும் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.